**தலைப்பு 147 – பிரதேச அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 147 – பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.8 |
| | | உள்ளகக் கணக்காய்வின் குறைபாடுகள் | 2.9 |
| | | பாதீடு மதிப்பீடு நடைமுறை ரீதியாக தயாரிக்கப்படாமை | 2.5(அ) |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் முறைப்படி நடாத்தப்படாமை | 2.10 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.3.1(அ) |
| | | பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றம் கிடைக்காத செயற்திட்டங்கள் | 2.3.1(ஆ) |
| | | உள்ளக கணக்காய்வு | 2.9 |
| | | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.3.2 |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படு வதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்ட தெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை<br><br>வங்கிக் கணக்கு செயற்படுத்தலில் குறைபாடு | 2.3.3<br><br>2.7 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.5(ஆ) |

## 2 போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அமைச்சின் பிரதான பணிகள்

(அ) பிராந்திய அபிவிருத்தி மற்றும் தேசிய விவசாயம் சார்ந்த பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம) நிறுவனங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல்.

(ஆ) பிராந்திய கைத்தொழில் ஊக்குவிப்பு உள்ளடங்களாக பிராந்திய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

(இ) நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னருவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

### 2.2 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அதன் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்

அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் கடமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் | தாபிப்பதற்கான அதிகார பலம் | | கடமைகள் |
|---|---|---|---|
| தேசிய விவசாயம் சார்ந்த பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம) | 2016 மார்ச் 07 ஆந் திகதிய 1958/7 ஆம் இலக்க வர்த்தமானி | (i) | தேசிய விவசாய உற்பத்தியை அதிகரித்து உணவு ஏற்றுமதிக்காக அண்ணியச் செலவானி அளவினை குறைப்பதற்காக பூமியையும் மனித வளங்களையும் முகாமை செய்தல் |

(ii) புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலக்கிடப்பட்ட காணிகளில் உற்பத்தி செயற் திட்டங்களை அங்கீகரித்து தேசிய விவசாய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தல்

(iii) மண், நீர் தாவரங்கள், ஆகிய இயற்கை வளங்களை நிரந்தரமாக முகாமை செய்து ‘‘பசுமையான’’ இலங்கையொன்றை உருவாக்கு வதற்காக பங்களிப்புச் செய்தல்

**2.3 செயலாற்றல்**

**2.3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திலிருந்து விலகுதல் போன்ற)**

அமைச்சு தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெளிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு முன்மொழியின் பிரகாரம் கிழக்கு மற்றும் மத்திய வலயங்களுக்குரிய 09 மாவட்டங்களில் முதலீட்டு மேம்பாட்டிற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியன் ஆன நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 99.86 மில்லியனான நிதி ஏற்பாடுகளில் ரூபா 94.2 மில்லியன் நோக்கத்திற்குட்படாத 18 செயற்திட்டங்கள் தேசிய பெறுகை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முறையான திட்டங்கள் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், செயற்திட்டம் தொடர்பான சரியான அனுமதிக்கப்பட்ட மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்படாமை, செயற்திட்டங்கள் தொடர்பாக சரியான சாத்தியவள உறுதிப்படுத்தப்படாமை மற்றும் காணிகளில் உள்ள உரிய உரித்து சிக்கல்களை சீராக்காமை விடயங்கள் காரணமாக ரூபா 36 மில்லியன் பெறுமதியான 07 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 58.2 மில்லியனான 11 செயற்திட்டங்களுக்காக ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் அதன் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் 2018 யூலை 17 ஆந் திகதி வரையிலும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கிழக்கு மற்றும் மத்திய வலயங்களுக்குரிய 09 மாவட்டங்களில் முதலீட்டு மேம்பாட்டிற்காக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வலயங்களுக்கு புறம்பாக வெளி வலயங்களான கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி, குருநாகல், ஆகிய மாவட்டங்களில் வீதி கொங்கிரீட் இடல் மற்றும் நீர் முன்மொழிவு திட்டங்கள் ஸ்தாபிப்பிற்காக ரூபா 22,667,964 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச அபிவிருத்தி மற்றும் தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபைக்கு (ஹபிதம) உரித்தாக செயற்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 61,289,879 செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்களின் பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 2018 யூலை 17 ஆந் திகதி வரையிலும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 10,478,241 தொகையும் பிராந்திய ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 3,691,230 உமாக ரூபா 14,169,471 செலவிடப்பட்டிருந்தது. அவற்றிற்குரிய செயற்திட்டங்கள் களணி மற்றும் பியகம பிரதேச செயலக பிரிவுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல் முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்**

04 பிரதேச செயலகங்களுக்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 14.82 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 04 செயற்திட்டங்களிற்காக எவ்வித நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரித்தாக பிரதேச அபிவிருத்தி அமைச்சினாலும் தமது விடயப்பரப்பின் கீழ்வரும் செயற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக வறுமையை ஒழித்தல் மற்றும் பட்டினியை ஒழித்தல் போன்றவை இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைவதற்கு வேண்டிய மைல்கல் உட்பட செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காணும் நடவடிக்கை 2018 யூலை 17 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2018 யூன் 05 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) வாகனப் பயன்பாடு**

அமைச்சினுள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் 20 வாகனங்கள் காணப்படுவதுடன் அவ் வாகனங்களில் 119963 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அவ்வாகனங்களுக்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்காக ரூபா 1,051,982 தொகையும் சேவை புரிவதற்காக ரூபா 668,747 தொகையும் வாகன திருத்த வேலைகளுக்காக ரூபா 14,742,695 தொகையும் வாகன காப்புறுதிக்காக ரூபா 1,757,773 தொகையுமாக மொத்தம் ரூபா 18,221,197 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்தியமைக்காக சாரதி சம்பளம் மற்றும் படிகளாக ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 151.89 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) அலுவலகங்களை பராமரித்தல் செலவினம்**

அமைச்சு அலுவலகம் வருடாந்தம் ரூபா 132,925,077 வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்திற்கான வருடாந்த சுத்திகரித்தல் கட்டணம் ரூபா 1,513,907 ஆக இருந்ததுடன் பாதுகாப்பு சேவைகள் கட்டணங்கள் ரூபா 2,495,591 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத்திற்கான செலவினம் ரூபா 136,934,575 ஆக இருந்தது. உள்ளவாறான பதவியணியினர் 100 ஆக இருந்தமையால் அலுவலகத்தினை பராமரிப்பதற்கான ஒரு நபரிக்கான செலவினம் ரூபா 1,369,346 ஆக இருந்தது.

**2.5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 02 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2016 | மீண்டெழுபவை | 469.93 | 421.16 | 48.77 | 10.38 |
| | மூலதனம் | 164.50 | 119.44 | 45.06 | 27.39 |
| | **மொத்தம்** | **634.43** | **540.60** | **93.83** | **14.79** |
| 2017 | மீண்டெழுபவை | 340.04 | 282.79 | 57.25 | 16.83 |
| | மூலதனம் | 318.42 | 153.36 | 165.06 | 51.83 |
| | **மொத்தம்** | **658.46** | **436.15** | **222.31** | **33.76** |

**(அ) பாதீட்டு மதிப்பீடு நடைமுறை ரீதியாக தயாரிக்கப்படாமை**

அமைச்சிற்குரிய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதியினை பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு நடைமுறை ரீதியான வகையில் தயாரிக்கப்படாததன் காரணமாக பின்வரும் குறைபாடுகள் நிகழ்ந்திருந்தன.

(i) இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியின் பிராந்திய அபிவிருத்தியை பலப்படுத்துவதற்காக 04 மூலதன விடயங்களின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 128,025,000 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 88,972,912 அல்லது 69 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அது அச் செலவின விடயங்களில் 52 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மிகை மதிப்பீடு தயார்படுத்தல், திட்டத்தின் பிரகாரம் நிதிஏற்பாடு பய்னபாட்டிற்கு எடுக்கப்படாமை காலத்தை திட்டமிட்டு முறையாக கட்டுநிதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காலத்தை திட்டமிட்டு முறையான கட்டுநிதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ii) செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 200,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 197,095 அல்லது 98 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. தேவைப்பாடு இணங்காணப்படாமல் நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொண்டமை அதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை**

செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.6. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6 | 5.7 | 0.7 | 2.4 | 9 | 3.6 |

## 2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கிக் கணக்கிற்குரிய காசேட்டின் பிரகாரம் மீதி வங்கிக் கூற்றின் படி மீதிகளுக்கு இடையே இனங்காணப்படாத ரூபா 91,080 ஆன வேறுபாடொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்டதுடன் அம்மீதி இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு 2018 யூலை 17 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகயும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் II ஆம் அத்தியாயம் | பேணப்படவில்லை. |
| கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2.9 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களங்களில் உள்ளகக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையில் காலாண்டிற்கு ஒன்று வீதம் 04 கூட்டத்தொடர்ககள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 36,002,844 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 29,366 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 08 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 41 | 21 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 22 | 20 | 02 |
| (v) | அமைய ஒப்பந்த/ | 66 | 48 | 18 |
| | மொத்தம் | 147 | 100 | 47 |